Registered as a Newspaper

வட இலங்கையில் ஒரே ஒரு விளம்பர முகவர்கள்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
மே/பா. யாழ் பீச் இன்ஸ்
139, கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்.
புதுமையின் உறைவிடம் செனித்

# உதயன்

விலை ரூ. 1/-


உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

வட இலங்கையில் ஒரே ஒரு விளம்பர முகவர்கள்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங்சிஸ்டம்ஸ்
மே/பா. யாழ் பீச் இன்ஸ்
139, கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்.
புதுமையின் உறைவிடம் செனித்

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஆவணி மீ 17 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 துல்ஹஜ் பிறை 26 (02-09-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 245

# கோட்டை இராணுவ முகாமை மேலும் பலப்படுத்த உத்தரவு!

அப்பனே முருகா!
அருள் தா முருகா!!
முருகனுக்கு அரோஹரா!!!



வேல்கொண்டு வினை தீர்க்கும் முருகவேளுக்கு இன்று நல்லூரில் தேரோடுகிறது. சந்ததியை தீர்க்கும் நல்லூர்க் கந்தன், அடியாரின் பந்தங்களை நீக்கி தொல்லைகளைப் போக்குவதற்கு தேரேறி வருகின்றான்.

ஆட்சியார் தமிழ்ப்பகுதிகளில் செய்யும் அடுவினை இப்போதைய தொல்லை. சூரபத்மனைச் சங்காரம் செய்த திருக்கை வேலால் அரசினர் பாவச் செயலைச் சங்காரம் செய்ய முருகன் அருள் வேண்டி இறைஞ்சுவோமாக.

(தேர்த்திருவிழா சிறப்பிதழ் 3ஆம், 4ஆம், 5ஆம் பக்கங்களில்)

## போராளிகள் தாக்குதலை எதிர்கொள்ளவும் பணிப்பு

முச்சந்தி முனி





— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, செப்டம்பர் 2

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமைப் பலப்படுத்தி போராளிகளின் தாக்குதலை எதிர்கொள்ளும் படி வடபகுதி இணைப்பதிகாரி ஜெரிசில்வாவுக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

கூட்டுப்படைகள் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்க இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார் என்று கொழும்புப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் மூலம் நம்பிக்கையாகத் தெரியவந்தது.

கோட்டை இராணுவ முகாமிலிருந்து அடிக்கடி நடக்கும் ஷெல் தாக்குதல்களினால் யாழ்நகரில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுகின்றனர்.

இதனை ஆட்சேபிக்கும் விதத்தில் கோட்டையிலிருந்து இராணுவ முகாமை அகற்றும் படி கோரி அண்மையில் பெரிய ஊர்வலமும் நடத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அமிர்தலிங்கம் ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்து கோட்டை முகாமை உடனடியாக அகற்ற வேண்டும் என்று வற்புறுத்தியும் இருந்தார்.

அப்போது திரு. அமிர்தலிங்கத்துக்கு ஜனாதிபதி பதிலளிக்கையில், "கோட்டை முகாமை அகற்றும் சாத்தியம் அறவே இல்லை.

கோட்டையில் இருந்து இராணுவம் வெளியேறினால், தீவிரவாதிகள் கோட்டைக்குள் புகுந்து விடுவர்" என்றவாறு தெரிவித்து இருந்தார் என அறியவந்தது.

இப்போது—

யாழ்கோட்டை முகாமைப் பலப்படுத்தி போராளிகளின் தாக்குதலை எதிர் கொள்ளும் படி கூட்டுப்படைத் தளபதி, வடபகுதி இணைப்பதிகாரிக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்! (அ-ஐ-எ)

### யாழ். கோட்டைக்கு வந்த வெளிநாட்டு செய்தியாளர் குழு நகருக்கு வர அனுமதியில்லை

யாழ்ப்பாணம், செப். 2

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த வெளிநாட்டுச் செய்தியாளர் குழு ஒன்று கோட்டை இராணுவ முகாமில் நேற்று தங்கி இருந்தது.

குழுவில் அங்கம் வகித்த மூன்று செய்தியாளர்களும் கோட்டையை விட்டு யாழ்நகருக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்று தெரிய வருகின்றது.

மூன்று மணித்தியாலங்கள் யாழ்நகரில் நடமாட அவர்களை அனுமதிப்பது என்று முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வந்தது.

பின்னர் அந்த முடிவில் மாற்றம் செய்யப்பட்டு கோட்டையைவிட்டு வெளியேற அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. (உ-ச)

### போராளிகளும் கமாண்டோ உடையில்

கொழும்பு, செப். 2

மன்னாரில் கடந்த சனிக்கிழமை அதிரடிப் பொலிஸ் படை மீது தாக்குதல் நடத்திய போராளிகளும் கமாண்டோ சீருடையில் காணப்பட்டனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன. (உ-ய)

### எம். ஜி. ஆர் அமெரிக்கா செல்கிறார்

சென்னை, செப். 2

தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் நாளை புதன்கிழமை அமெரிக்கா செல்கின்றார்.

வைத்திய சிகிச்சைக்காக அவர் அமெரிக்கா செல்கின்றார்.

நியூயார்க் மருத்துவமனை ஒன்றில் அவர் எதிர்வரும் வியாழக்கிழமை சேர்க்கப்படுவார்.

12 தினங்கள் அவர் அமெரிக்காவில் தங்கியிருப்பார்.

செவ்வாய் புதுடில்லி செல்லும் முதலமைச்சருடன் அவரின் மனைவி ஜானகியும் செல்கிறார். (உ-எ)

## இலங்கை அரசு புதிய நகல் திட்டம் தயாரித்து வருகிறது

சென்னை, செப். 2

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான விரிவான, திருத்தப்பட்ட நகல் திட்டம் ஒன்றை இலங்கை அரசாங்கம் இப்போது தயாரித்து வருகிறது.

பி. ரி ஐ. செய்தி ஸ்தாபனம் இத் தகவலை வெளியிட்டது.

அரசியல் கட்சிகள் மாநாட்டிலும், இந்திய அரசிடமும் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபை திட்டத்தை விட புதிய நகல் திட்டம் வேறானதாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஏற்கனவே நடத்தப்பட்ட இரண்டு கட்டப் பேச்சுக்களின் போது ஆராயப்பட்ட பல சாதகமான அம்சங்கள் புதிய நகல் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாக அறிய வருகிறது.

இந்த நகல் திட்டம் போராளிகளுடனும் கூட்டணியுடனும் பேச்சுவார்த்தைகளைத் தொடர ஒரு நல்ல அடிப்படையாக இருக்கும் என நம்பப்படுவதாகவும் பி. ரி. ஐ. செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை புதிய நகல் திட்டம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இம்மாதம் 3 அல்லது 4 ஆம் திகதி கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாகத் திரு. அமிர்தலிங்கம் சென்னையில் தெரிவித்தார்.

## வடக்கு-கிழக்கில் தீவிரவாதிகள் ஆதிக்கம்; மாகாணசபை சட்டபூர்வமாக்கும் சிறிமாவின் மற்றொரு "கண்டுபிடிப்பு"

கொழும்பு, செப். 2

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இன்று தீவிரவாதிகளின் ஆதிக்கத்தில்-கட்டுப்பாட்டில் உள்ளன. அதைச் சட்டபூர்வமாக்குவதுதான் மாகாண சபைகளின் கடமையாக இருக்கப்போகிறது.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குறிப்பிட்டார்.

கொலன்னாவையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இப்படி ஒரு புதிய "கண்டுபிடிப்பைத்" தெரிவித்தார். அவர் மேலும் சொன்னதாவது:-

மிக விரைவில் மலையகத்தில் தனது மக்களுக்கு தனியான தாயகம் ஒன்றை அமைச்சர் தொண்டமான் கோர இருக்கிறார்.

இப்போது கூட தோட்டங்களில் வெளியார் குடியிருக்க ஓர் அங்குலக் காணியைக் கூட அனுமதிக்க தொண்டமான் மறுத்து வருகின்றார்.

மண் சரிவினால் பாதிக்கப்பட்ட சிங்களவருக்கு தோட்டப்பகுதிகளில் காணி வழங்க காணி அமைச்சர் காமினி திஸநாயக்கா எடுத்த முயற்சியை தொண்டமான் தோல்வியடையச் செய்து விட்டார்.

இந்த நிலையில் நாட்டைப் பிரிக்கும் இன்றைய அரசின் செயலுக்கு சுதந்திரக் கட்சி உடந்தையாக இருக்கமுடியாது.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார். (உ-எ)

## புன்னாலைக்கட்டுவனில் வயாவிளான் ம.ம.வி. தொடர்ந்து இயங்கும்

யாழ்ப்பாணம், செப். 2

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் தொடர்ந்தும் தற்காலிகமாக புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவை அரசினர் த. க. பாடசாலையில் இயங்கும்.

— இவ்வாறு கல்லூரி அதிபர் திரு எஸ். கணேச பிள்ளை தெரிவித்தார்.

கடந்த நான்கு மாதங்களாக இந்தக் கல்லூரி புன்னாலைக்கட்டுவனிலேயே இயங்கி வந்தது.

கடந்த சில தினங்களின் முன் மீளி முகாம் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து கல்லூரி மீண்டும் இயங்கும் என ஆசிரியர்கள், மாணவர் (6 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபை யோசனையைக் கைவிடுமாறு ஜனாதிபதியை நிர்ப்பந்திக்க பௌத்த பீடங்கள் கூட்டு முயற்சி

கொழும்பு, செப். 2

மல்வத்தை, அஸ்கிரிய, ராமநாயக்க பௌத்த மத பீடங்கள், மாகாண சபை யோசனைகளை அமுல் நடத்துவதைத் நிறுத்தும்படி ஜனாதிபதியை நிர்ப்பந்திக்கும் நடவடிக்கைகளைக் கூட்டாக எடுக்கத் தீர்மானித்துள்ளன என்று தெரிய வருகின்றது.

இதனிடையில் அஸ்கிரிய பீடாதிபதி வண பலிபான சந்தானந்த மகாநாயகதேரர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் மாகாணசபை யோசனைகளைக் கண்டித்தார்.

மாகாணசபைத் திட்டத்தை எதிர்ப்பவர்கள் துரோகிகள் என்று ஜனாதிபதி கூறிவருகிறார்.

நாடு துண்டு துண்டாகப் போவதற்கு வழி வகுப்பவர்களை என்ன என்று அழைப்பது?

இப்படி அவர் கேட்டார். (உ-ஐ-எ)

## கல்முனையில் அமைதி பேண இராணுவத்தின் உதவி கோருகின்றனர் தமிழர்!

கல்முனை, செப். 2

கல்முனையில் நடக்கும் தமிழ் முஸ்லிம் மோதல்களைத் தடுத்து அமைதி காப்பதற்கு இராணுவத்தின் உதவியைத் தமிழ்ப் பிரமுகர்கள் கோரினர்.

ஆனால் முஸ்லிம் பிரமுகர்கள் அதிரடிப்படையோரோந்து புரிந்தால் தான் அமைதி உண்டாகும் என்று தெரிவித்தனர்.

சமாதானக் கூட்டம் ஒன்றில் இவ்வாறு மாறுபட்ட கருத்துகளும் உதவிகளும் கோரப்பட்டது.

கல்முனையில் மீண்டும் ஏற்பட்ட தமிழ்-முஸ்லிம் மோதலை சமரசமாக்கும் முகமாக இச்சமாதானக் கூட்டம் பொலிஸ் நிலையத்தில் நடந்தது.

அம்பாறை மாவட்ட இணைப்பதிகாரி கப்டன் சுமணதாஸ தலைமை வகித்தார்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் ஜனாப் அப்துல் ஐவனர் உட்பட பல முஸ்லிம் தமிழ்ப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்ட சபை முன்னாள் உறுப்பி (6 ஆம் பக்கம் பார்க்க)

## வயாவிளான் ம. ம. வியின் பிரதான கட்டடமும் தகர்ந்தது

பலாலி, செப். 2

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் கட்டடங்களில் முக்கியமான மேல்மாடிக் கட்டடமும் நேற்று (திங்கட்கிழமை) தகர்க்கப்பட்டது.

சுமார் பல லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட மகாவித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வு கூடமும், பிரதம நூலகமும் இக்கட்டடத்திலேயே அமைந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

தொகுதிகளுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டினாலேயே இக்கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டடமும், பாடசாலையின் ஏனைய 'பிளாத்' உள்ள கட்டடப் பகுதிகளும் உடைக்கப்பட்டன.

ஏனைய கட்டடங்களின் (6 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம், செப். 2

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்த சுவாமி ஆலய ரதோற்சவதினம் இன்றாகும். தொல்லை வினை போக்கும் நல்லைக் கந்தன் ஆறுமுகப் பெருமானாய் சித்திரத் தேரில் அணி வீதி வருவார்.

காலை 7 மணிக்கு ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதராய் எழுந்தருளி ரதத்தில் ஆரோகணிப்பார். 8 30 மணியளவில் தேர் இருப்புக்கு வரும்.

மாலை 5 மணிக்கு வெள்ளி ரிஷப வாகனத்தில் தேரடி பார்க்கும் திருவிழா.

மாலை 3 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நிகழ்ந்து வரும் தொடர் சொற்பொழிவில் "தவங்கள் போக வழி" என்னும் பொருளில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா சொற்பெருக்காற்றுவார்.

மாலை 6.15 மணிக்கு ஆயைத்துக்கருசேயுவின் நாவலர் மணி மண்டப வளவில் தெய்வீகத் தமி (6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

2—09—1986
செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10.35 முதல் 12 05 வரை

ராகுகாலம்:
3.05 முதல் 4.35வரை

இலை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## இலங்கை இனப்பிரச்சினை ராஜீவ், பிரேமா 3 சுற்றுப்பேச்சு ஹராரேயில் நடத்துவர்

கொழும்பு, செப். 2

இலங்கை இனப்பிரச்சினை குறித்து பிரதமர் பிரேமதாசாவும் பிரதமர் ராஜீவ்காந்தியும் 3 சுற்றுப் பேச்சுக்களை ஹராரேயில் நடத்துவர்.

இப்படி ஹராரேயில் இருந்து செய்திகள் வந்துள்ளன.

பிரதமர் பிரேமதாசா தங்கியிருக்கும் ஹோட்டலிலேயே பிரதமர் ராஜீவ்காந்தி பிரதமர் பிரேமதாசாவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவார்.

முதலாவது சுற்றுப் பேச்சு இருவருக்கும் இடையில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அணிசேரா இயக்க மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இரண்டு பிரதமர்களும் ஹராரேயில் தங்கியுள்ளனர் என்பது தெரிந்ததே. (உ-ஐ-எ)

### கல்முனையில் கடைகள் எரிப்பு தமிழர் கைது

கல்முனை, செப். 2

நேற்றுக் காலை கல்முனை நகரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடை ஒன்று எரிக்கப்பட்டது.

இதன்பின்னர் பாத்திமா கல்லூரியில் தங்கி இருக்கும் தமிழ் அகதிகளில் இரண்டு தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நல்லதம்பி சண்முகநாதன், தம்பிப்பிள்ளை ஸ்ரீதரன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள்.

இதனிடையில் அங்கு நேற்று மாலை 5 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணிக்கு நீக்கப்படுகிறது. (உ-ஈ-84)

இளைய தலைமுறையின் இதயம் தவழும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

தெய்வீக வாழ்க்கை முழுமையானது. எல்லையற்றது. பரிபூரணமானது. ஆனந்தமயமானது. ஆகவே, தெய்வீக வாழ்க்கை வாழ். சரியாக சிந்தனை செய். ஜாக்கிரதையாக முடிவெடு. சாமர்த்தியமாக வேலை செய்.

—சுவாமி சிவானந்தர்


# உதயன்

இன்னமை - அஞ்சாமை - அறவுணர்மை

இல 15 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

02-09-86 த.பெ.23


## குட்டை குழம்புகிறது; கலங்கித் தெளிவது எப்போது?

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சி தொடர உள்ளது.

இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்த மாகாண சபை யோசனைகளை ஆராய்வதற்கான அரசியல் கட்சிகள் மாநாடு முதலில் நடந்தது. அதைத் தொடர்ந்து அரசாங்க—கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் இரண்டு கட்டங்களாக நடைபெற்றன.

அவற்றின் தொடராக மூன்றும் கட்டப் பேச்சுக்கள் புதுடில்லியில் நடக்கப்போகின்றன.

புதுடில்லிப் பேச்சுக்களுக்கு தமிழ்ப் போராளிகள் அமைப்புகள் அழைக்கப்பட வேண்டும். அவை பங்கு கொண்டால் மட்டுமே நாமும் கலந்து கொள்வோம் இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இலங்கை, இந்திய அரசுகளுக்கு அறிவித்துவிட்டனர்.

அரசாங்கமும், கூட்டணி மட்டுமன்றி ஏனைய அமைப்புகளும் கலந்து கொள்ளும் விதத்தில் பேச்சுக்கள் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறது. அரசு—கூட்டணி இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் முடிவில் அரசு வெளியிட்ட அறிக்கை அந்த விருப்பத்தைப் புலப்படுத்துகிறது.

அரசியல் கட்சிகள் மாநாட்டின் முடிவிலும் தமிழ்ப் போராளிகளைப் பேச்சில் கலந்து கொள்ளுமாறு அழைப்பது என்று தீர்மானமே இயற்றப்பட்டது. ஆனால் உத்தியோக பூர்வமாக அழைப்பு எதுவும் அனுப்பப்பட்டதாகத் தெரியவில்லை.

எனினும் இம்முறை போராளிகள் அமைப்புக்களை உத்தியோக ரீதியாக அழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தியா இது விடயத்தில் அதிக அக்கறையாக இருப்பதாக அரசியல் அவதானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இதற்கிடையில் அரசு— கூட்டணி இரண்டாம் கட்டப் பேச்சின்போது ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டதாக இப்போது தகவல்கள் கிடைக்கின்றன.

தமிழ் மொழிப் பிராந்தியம், காணி ஆகிய இரண்டு விடயங்களும் தான் பெரும் முட்டுக்கட்டையான அம்சங்களாக இருப்பதாக அறிய வந்திருக்கிறது.

தமிழ் மொழிப் பிராந்தியக் கோரிக்கைக்குப் பதிலாக அரசு மூன்று அம்ச மாற்றுத் திட்டம் ஒன்றை முன்வைத்திருக்கிறது.

அந்த மாற்றுத் திட்டத்தில் அடங்கும்— வடக்கு- கிழக்கு இணைப்புக்கு கிழக்கு மாகாண மக்கள் ஆதரவாக இருக்கிறார்களா என்பதனை அறிய சர்வசன வாக்கெடுப்பு நடத்துவது என்ற முதலாவது அம்சத்தை கூட்டணி உடனேயே நிராகரித்து விட்டதாக அறிய வந்திருக்கிறது.

கிழக்கின் தமிழ்ப் பகுதிகளை வடமாகாணத்துடன் இணைப்பதென்ற அம்சமும் ஆபத்தானதாகக் கருதப்பட வேண்டும்.

ஏனெனில் கூட்டணியினர் முன்னர் விட்ட தவறினால் உருவான சேருவில தேர்தல் தொகுதி கிழக்கின் தமிழ்ப் பகுதியாகக் கருதப்பட மாட்டாது. அதாவது திருகோணமலை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பின் 800 சதுர மைல் கிழக்கு மாகாணத்தில் இருந்து பறி போகும் அதே போன்று அம்பாறைத் தொகுதி பறி போய் விடும்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் அரசின் மாற்றுத்திட்டம் தமிழர்களைப் பொறுத்தமட்டில் கவ்வைக்கு உதவாதது.

தமிழர் தாயகம் வடக்கு என்றும் கிழக்கு என்றும் பிளவுபடாமல் இருக்கக் கூடிய ஒரு தீர்வே தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடியது.

வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வுக்கு முஸ்லிம் மக்களில் பெரும்பகுதியினரும் ஆதரவாக இருக்கிறார்கள். அரசாங்கக் கட்சியில் உள்ள பல கிழக்கு முஸ்லிம் எம். பிக்களே ஆதரவு தெரிவித்திருப்பதாகத்தகவல்கள் கூறுகின்றன.

கிழக்கிலங்கை தமிழ் -- முஸ்லிம் மக்களுக்கு இடையே உள்ள சகோதர உணர்வைத் தெரிந்து கொள்ள முடியாத கொழும்பு வாழ் முஸ்லிம் தலைவர்கள் சிலர்தான் வடக்கு—கிழக்கு இணைப்புக்கு எதிராகக் கொக்கரிக்கின்றனர்.

எது எப்படி இருப்பினும்—

வடக்கு—கிழக்கு இணைந்த சுயாட்சி முறை இல்லாத தீர்வைத் தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள்.

வடக்குக் கிழக்கை இணைத்துத் தீர்வு வழங்க சிங்களத் தீவிரவாதிகள் இடங் கொடுக்கமாட்டார்கள் என்பது அரசாங்கத்தின் அச்சம்.

போராளிகள் மீதோ, கூட்டணி மீதோ, இலங்கை அரசு மீதோ தான் எதுவித நிர்ப்பந்தமும் செய்யப்போவதில்லை என்று இந்தியா அறிவித்திருக்கிறது.

அவ்வாறுனால் பிரச்சினை எவ்வாறு தீரப் போகிறது? பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கிடைக்கும் சாத்தியம்தான் உண்டா?

பேச்சுவார்த்தை தவிர்ந்த மாற்று வழியினூடாவது நல்ல தீர்வு கிடைப்பது இலேசுப்பட்ட காரியமா?

இவ்வாறு பல கேள்விகள் வந்து முட்டி மோத தமிழர் பிரச்சினை மேலும் பல காலம் இழுபடும் பிரச்சினையாக இருக்குமோ என்ற நிலை உருவாகி இருக்கிறது.

குட்டை மேலும் குழம்புகிறது. கலங்கித் தெளிவது எப்போதோ?

## நல்லூருக்கு விசேஷ பஸ்

யாழ்ப்பாணம், செப். 2

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு நல்லூர் கோவில் வரை ஐந்து மினி பஸ் சேவையை விஸ்தரித்துள்ளதாக வட பிராந்திய மினிபஸ் சேவைச் சங்கச் செயலாளர் ஈ. செல்வராஜா தெரிவித்துள்ளார்.

பக்தர்களின், சமய ஸ்தாபனங்களின் வேண்டுகோளுக்கு இணங்க கொக்குவில் தாவடிச் சந்தியிலிருந்து 808 சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை, அளவெட்டி சேவைகளும் கோவில் வரை செல்ல ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (இ-5)

## அரசின் இறுதி நடவடிக்கை பற்றி ஜனாதிபதி

கொழும்பு, செப் 2

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசு எடுத்து வரும் இறுதி நடவடிக்கை பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தனா இம்மாதம் 6 ஆம் திகதி வெளியிடுவார்.

இப்படி கொழும்பு அரசு வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

மொரட்டுவ மைதானத்தில் ஐ.தே.க. 40 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி ஆறும் திகதி மாலை நடைபெற இருக்கும் பொதுக் கூட்டத்தில் வைத்து இறுதி நடவடிக்கைகள் பற்றிய முக்கிய அறிவிப்பை ஜனாதிபதி வெளியிடுவார் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேச இருக்கின்றனர்.

இப்பொதுக் கூட்டம் பற்றில் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ஒழுங்கு செய்யப்படுகின்றது. (இ-எ)

## மினிவான்மீது துப்பாக்கிச் சூடு
### சிங்களவர் பலி

திருகோணமலை, செப். 2

அக்லை — கந்தளாய் வீதியூடாக சென்று கொண்டிருந்த மினிவான் ஒன்றின் மீது ஞாயிறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த வானின் சாரதி, கிளீனர் ஆகியோர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

இருவரும் சிங்களவர்கள். இதைத் தொடர்ந்து கந்தளாய்ப் பகுதியில் நேற்றுப் பதற்றம் நிலவியது.

தீவிரவாதிகளே துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-ஏ-150)

## ஏ. கே. 47 தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம் செப். 1

ஏ. கே. 47 ரகவிளையாட்டுத் துப்பாக்கிகளுக்கு இம்முறை நல்லூரில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாம்.

நல்லூர் கோவில் உற்சவத்திற்கு வரும் சிறுவர்களை, விளையாட்டுப் பொருள்களுள் துப்பாக்கிகளே பெரிதும் கவர்கின்றன.

அவற்றிலும் ஏ. கே. 47 ரக விளையாட்டுத் துப்பாக்கிகளையே சிறுவர்கள் மிகவும் விரும்பி வாங்குகிறார்களாம். (இ-5)

## முஸ்லிம்களுக்கும் இன்று போராளிகளால் நன்மை
### சம்மாந்துறைச் சட்டத்தரணி கூறுகிறார்

அப்பாறை செப். 2

இனரீதியாக நோக்காமல் தேசியரீதியாக நோக்கினால் தமிழ் மக்களின் தியாகங்களை நாம் பாராட்டவும், ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். குறிப்பாக போராளிகளின் போராட்டங்களால் இன்று முஸ்லிம்களும் நன்மை அடைகின்றனர்.

கல்முனைப் பிரதேசத்தின் பிரபல சட்டத்தரணியும், சம்மாந்துறையைச் சேர்ந்தவருமான ஜனாப். யூ. எம். எம். முகைடீன் மேற்கண்டவாறு கூறினார்.

சம்மாந்துறை இஸ்லாமிய நிலையம் 'சமகால நிலைமைகளும், அம்பாறை மாவட்ட முஸ்லிம்களும்' எனும் தலைப்பில் சமீபத்தில் கருத்தரங்கு ஒன்றை அண்மையில் நடத்தியது.

சட்டத்தரணி ஜனாப் முகைடீன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

அரசுக்கும் தமிழ்ப் போராளிகளுக்குமுள்ள பிரச்சினை கிழக்கு மாகாணத்தைப் பற்றியது தான்; வடக்கைப் பற்றிய பிரச்சினை ஏற்கனவே தீர்ந்துவிட்டது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட மூவின மக்களும் சமமான விகிதாசாரத்துடன் வாழ்கின்றனர்.

இதன் காரணமாகவே வடக்கை விட்டுக்கொடுத்தாலும், கிழக்கை விட்டுக்கொடுப்பதற்கு அரசு தயாரில்லை.

இருப்பினும் முஸ்லிம்களைப் பொறுத்தவரையிலும் நாம் வடக்கு கிழக்கு இணைப்புக்கு ஆதரவு வழங்க முடியாத நிலையிலுள்ளோம்.

ஏனெனில் கிழக்கில் இன்று விகிதாசாரப்படி 33 சதவீதமாக வாழும் முஸ்லிம்கள் வடக்கு கிழக்கு இணைக்கப்படுமானால் 16 சதவீதமாகக் குறைந்து பலமிழந்துவிடுவார்கள்.

வடக்கு கிழக்கு இணைப்புக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கிறோமே தவிர போராளிகள்போராட்ட நிலைக்கு நாம் ஆதரவே காட்டுகிறோம்.

குறிப்பாக அரசின் திட்டமிட்ட குடியேற்றங்கள் காரணமாக முஸ்லிம்களும் இன்று பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று அம்பாறை மாவட்டத்தில் நுரைச்சோலைக்கண்டம் முதல் அரசம்பலவரை சுமார் 5000 ஏக்கர் தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகளைப்பறித்து சிங்களவர்களுக்கு வழங்கியுள்ளனர்.

இத்தகைய நிலைப்பாடு களைத்தடுப்பதற்கு, அரசின் திட்டமிட்ட குடியேற்றத்தை நிறுத்துவதற்கு, தமிழ் மக்களுடன் சேர்ந்துதான் முஸ்லிம்களும் போராடவேண்டும்.

1947 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் 37 ஆயிரம் முஸ்லிம் வாக்காளர்களும், இரண்டாயிரம் சிங்களவாக்காளர்களுமே இருந்தனர். ஆனால் இன்றுள்ள நிலையில் இங்கு முஸ்லிம்களைவிட 28 ஆயிரம் சிங்களவர்கள் கூடுதலாக உள்ளனர்.

இப்படி இவர் கூறினார். (இ - 14)

## மன்னாரில் இறந்த 4 பேரும் அடையாளம் காணப்பட்டனர்

யாழ்ப்பாணம், செப் 2

மன்னாரில் அதிரடிப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவர்களில் நான்குபேர் அடையாளம் காணப்பட்டனர்.

வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்ள கொழும்புக்குப் பிரயாணம் செய்த தமிழ் இளைஞரும் உயிரிழந்தவர்களில் ஒருவர்.

இறந்தவர்களின்பெயர் விவரங்கள் வருமாறு:

அருளானந்தம், வயது 44 தோட்டக்காடு, மன்னார்.

நந்தகுமார் வயது 19, பள்ளிமுனை.

திபாகு வயது 83 தோட்டக்காடு, மன்னார்.

மகாராசா ரவீந்திரன், வயது 24 (வெளிநாட்டுப் பயணமாக கொழும்பு செல்லும்போது உயிரிழந்தவர்.)

முதல் மூவரின் சடலங்களும் உறவினர்களால் பொறுப்பேற்கப் பட்டன.

பொறுப்பேற்கப் படாத நிலையில் மன்னார் ஆஸ்பத்திரியில் ரவீந்திரனின் சடலம் நேற்று வரை இருந்தது. (இ-எ)

## மாகாண சபைகளுக்கு எதிராக வாக்களிக்க மக்கள் தமது எம்.பிக்களை வற்புறுத்த வேண்டும்
### சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, ஆக. 1

மாகாண சபைகளுக்கு எதிராக வாக்களிக்கும்படி மக்கள் தங்கள் தொகுதி எம்பிக்களை வற்புறுத்த வேண்டும்.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நாரம்மல என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

மாகாணசபைச் சட்டமூலம் நாடாளுமன்றம் செல்லும் முன்னர், அது குறித்து சர்வசன வாக்கெடுப்பு நடத்தும்படியும் மக்கள் தங்கள் எம்பிக்களைக் கேட்க வேண்டும்.

மத்திய ஊவா மாகாணங்களைத் தனது கைக்குள் கொண்டு வரும் சந்தர்ப்பங்களை அமைச்சர் தொண்டமான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

பின்னர் நுவரெலியா மாவட்டத்துடன் அவற்றை இணைத்துப் பிரதேச சுயாட்சி பெறுவதே அமைச்சர் தொண்டமானின் நோக்கம்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார். (இ-எ)

## அதிரடிப் பொலீஸ் மன்னாரில் அட்டகாசம்

யாழ்ப்பாணம், செப். 2

மன்னார் சந்தையில் ஞாயிறு காலையில் அதிரடிப் பொலீஸார் வெறும் அட்டகாசத்தில் ஈடுபட்டனர்.

சந்தைக்குச் சென்ற தமிழர்கள் அரசாங்கழியினர் என்ற பேதமின்றித் தாக்கப்பட்டனர்.

கைக்கின் டயர்களில் உள்ள காற்றைத் திறந்து விட்டுத் தோளில் தூக்கிச் செல்லும்படி பொது மக்கள் பலர் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

மன்னார் நீதிமன்றத்தின் முக்கிய அதிகாரி ஒருவர் செம்மையாகத் தாக்கப்பட்டார். மன்னார் தபால் நிலையச் சிற்றூழியரான இம்மனுவலும் தாக்கப்பட்டார்.

சங்குப்பிட்டியில் இருந்து வந்த பஸ் ஒன்று மறிக்கப்பட்டு அதில் இருந்த பயணிகள் தாக்கப்பட்டனர்.

எமிலி ட்ரவல்ஸுக்குச் சொந்தமான வான் ஒன்றும் சேதமாக்கப்பட்டது. பேசாலையைச் சேர்ந்த இவ்வானில் வந்தவர்கள் தாக்கப்பட்டனர்.

சனிக்கிழமையன்று நடந்த சம்பவம் ஒன்றில் அதிரடிப் பொலீஸ் படையைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஒருவர் கொல்லப்பட்ட பின்னரே இந்த அட்டகாசங்கள் இடம் பெற்றன.

மன்னார் நகரில் கடைகள் மூடப்பட்டுக் காணப்பட்டன.

முறைப்பாடுகளைத் தொடர்ந்து மன்னார் அரச அதிபர் பொலிஸாருடன் தொடர்பு கொண்டார்.

அதைத் தொடர்ந்து அதிரடிப் பொலீஸாரின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டது.

பின்னர் இராணுவம் வந்து கடைகளைத் திறக்கும்படி ... கேட்டுக் கொண்டது. (இ-எ-10)

## 'உதயன்' செய்தியால் பலன்
## மண்டைதீவுக்கு குடிதண்ணீர் விநியோகம்

மண்டைதீவு, செப்.2

மண்டைதீவுப் பகுதிக்கு விரைவில் குடிதண்ணீர் வழங்கப்பட இருக்கின்றது.

இப்பகுதியில் ஏற்பட்ட குடிதண்ணீர்த் தட்டுப்பாடு குறித்து உதயனில் வெளிவந்த செய்தி, சம்பந்தப்பட்ட அமைச்சு அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

சமூக சேவை திணைக்களத்திலிருந்து குடி தண்ணீர் விநியோகிப்பதற்கான வேண்டுகோள் பத்திரங் ... (இ-5)

## செய்திக்கொத்து

### திருமலை பிரசைகள் குழு முறையிட்டது

திருகோணமலை, செப். 2

தம்பலகமம் கிராமத்தில் உள்ள தமிழ் மக்கள் குறைகள் பற்றி திருமலை பிரசைகள் குழு தூதுக்கோஷ்டி ஒன்று முறையிட்டது.

குறைகளைத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இணைப்பதிகாரி உறுதியளித்தார்.

பிரசைகள் தூதுக்குழுவில் தம்பலகமம் பிரசைகள் குழுத்தலைவர் திரு. என் கிருஷ்ணராஜா, திருமலை பிரசைகள் குழுச் செயலாளர் திருமதி சுபாஷினி வரதன், உபதலைவர் வண.பிதா பிட்டர் குருகுல ஆராச்சி ஆகியோர் அங்கம் வகித்தனர். (இ-எ-150)

### மூடப்பட்டுள்ளது

வல்வெட்டித்துறை, செப்.2

சிறு கைத்தொழில் திணைக்களத்தினால் நடத்தப்படும் புளியங்கூடல் நெசவுப் பயிற்சி நிலையம் கடந்த சில மாதங்களாக மூடப்பட்டுள்ளது. இதனால் இவ்வூர்ப் பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (இ-16)

### சிரமதானம்

உடுப்பிட்டி செப்.2

அல்வாய் தெற்கு கரம்பன் பொது மயானமும், மயானத்திற்குச் செல்லும் வீதியும் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டன.

புலோலி— அல்வாய் மக்கள் ஒன்றியம் பருத்தித்துறைப் பிரசைகள் குழுவினர் அனுசரணையுடன் இச்சிரமதானத்திற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தது (இ-157)

### காரைநகரில் கம்பன் விழா

யாழ்ப்பாணம், செப்.2

இம்மாதம் முற்பகுதியில் காரைநகரில் கம்பன் சமுக அங்குரார்ப்பணமும், கம்பன் விழாவும் நடைபெற உள்ளன.

யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த தமிழறிஞர்கள் கலந்து கொள்ள உள்ள இக்கம்பன் விழாவில் பட்டிமண்டபம், மேன்முறையீட்டுப் பட்டிமண்டபம் கவியரங்கு, சொற்பொழிவுகள் இடம் பெற உள்ளன. இது இரண்டு நாட்களுக்கு இடம் பெறும். (இ)

## உமா கூறுகிறார்:
## மாகாணசபை யோசனை பேச்சுக்கான ஓர் ஆரம்பமாகக்கூட இருக்க முடியாது

கொழும்பு, செப் 2

ஜனாதிபதியின் மாகாண சபையோசனைகள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஓர் ஆரம்பமாகக் கூட இருக்கவே முடியாது.

இப்படி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் திரு. உமா மகேஸ்வரன் செய்தி ஸ்தாபனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

தமிழரின் நியாயமான உரிமைகளைப் 'பேரம் பேசும் பொருளாக' எடுக்கக் கூடாது.

ஜனாதிபதியிடமிருந்து சலுகைகளை எதிர்பார்க்கும் நிலையில் தமிழினம் இல்லை.

சர்வதேச சமூகத்தின் நெருக்குதலுக்குப் பயந்து, பணிந்தே ஜெயவர்த்தனா அரசு பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளது.

சிங்களக் கட்சிகளின் உறுதியின்றி இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது.

இன்று இலங்கையின் நிலை எந்த நேரத்தில் வெடிக்கும் என்று சொல்ல முடியாத கட்டத்தில் உள்ளது.

இப்படி திரு. உமா மகேஸ்வரன் சொன்னார். (இ ஐ-எ)

## மோட்டார் சைக்கிள் விபத்து

யாழ்ப்பாணம், செப் 2

வியாளிளானில் ஞாயிறு மாலை இடம் பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலின் போது வேகமாக மோட்டார் சைக்கிள் செலுத்திய ஒருவர் விபத்துக்குள்ளானார்.

தலையில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் அவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

காயமடைந்தவர் நல்லூரைச்சேர்ந்த ஆர். தேசவன் வயது 29. (இ - 10)



## பொய்யாமொழி

குறள்:

அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலங் கரி.

பொருள்:

அருளுடையவராக வாழ்கின்றவர்க்குத் துன்பம் இல்லை; காற்று இயங்குகின்ற வளம் பொருந்திய பெரிய உலகத்தில் வாழ்வோரே இதற்குச் சான்று ஆவர்.

## ராஜீவின் செல்வாக்கு போராளிகள் மீது வேண்டும்
### சிவ்சங்கரிடம் ஹமீட் கோரிக்கை

ஹராரே, செப் 2

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் வகையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தமது செல்வாக்கை போராளிகள் குழுக்கள்மீது அதிக அளவுபிரயோகிக்கவேண்டும்.

—இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சர் சிவ்சங்கரிடம் இலங்கை வெளிநாட்டமைச்சர் சாகுல் ஹமீட் தெரிவித்தார்.

சிம்பாப்வேயில் நேற்று ஆரம்பமான அணிசேரா மாநாட்டின் குழுநிலைக் கூட்டத்தில் இவ்விதம் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணும் வகையில் பல்வேறு தமிழ் போராளிகள் குழுக்களுக்கிடையே தமது செல்வாக்கை மேலும் அதிகமான அளவில் பிரதமர் ராஜீவ்காந்தி பயன்படுத்தவேண்டுமென இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா கோருவதாக ஹமீட் எடுத்துரைத்தார். (உ-ஒ)

## ரவிசங்கருக்கு டாக்டர் விருது

கல்கத்தா, செப்.1

சித்தார் வாத்திய மேதை ரவிசங்கருக்கு கல்கத்தா பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. (ஒ)

## ஹென்றி மூர் காலமானார்

லண்டன்,செப். 1


பிரசித்திபெற்ற சிற்பக்கலைஞர் ஹென்றிமூர் நேற்று லண்டனில் காலமானார்.

உலகின் முக்கிய இடங்கள் பலவற்றில் இவரின் வெண்கல சிற்பங்கள் அமைந்துள்ளன.

கற்பாறைகளிலும் வெண்கலங்களிலும் சிற்பங்கள் செய்வதில் நிபுணத்துவம் பெற்றிருந்த மூர் தமது 88 வயதில் யோக்ஷயரில் காலமானார். (ஒ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நல்லைக் கந்தன் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்



நல்லூர் கந்தசுவாமி கோயிலின் எழில்மிகு தோற்றம்

# அருள்மலர்ப் பாதங்காட்டும்

## முருகா! எனும் திருநாமம்

இயற்கை வனப்பும் எழிலும் நிரம்பிய குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகப் பெருமான் இளமை, அழகு, மணம், தெய்வநலம் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்று சிறந்த அழகனாக விளங்குகிறான். முருகப் பெருமானுடைய ஊர்தியாகிய மயிலும் தனியழகு வாய்ந்தது.

இவ்வுலகில் அழகிய பூக்கள், பறவைகள், மிருகங்கள் பல உள. ஆனால் அவற்றின் அழகு காலத்தால் மாறுபடும் தன்மை வாய்ந்தது. முருகப் பெருமான் குன்றாத இளமையும், மாறாத அழகும் ஒருங்கே அமையப் பெற்றவர் என்பதை அடியார்கள் தாங்கள் பாடிய பாடல்கள் மூலம் விளக்கியுள்ளனர்.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் "பண்டைத்தன் மணம் கமழ் தெய்வத்து இளநலம் காட்டி" என்று முருகப் பெருமானுடைய சிறப்பைப் பாடியுள்ளார்.

அருணகிரிநாதர் முருகப்பெருமானை சந்தப் பாடல்களால் போற்றி வழிபட்டுத் தனது அருளனுபவத்தை பல நூல்கள் மூலம் தெரிவித்துள்ளார். ...ரன் போன்ற ஆறு திருவதனங்களையும், திருவருள் பாலிக்கின்ற திருக்கண்களையும், திருக்கரங்களையும், தாமரைமலர் போன்ற திருவடிகளையும் கண்டு மகிழ்வதற்கு அவன் செய்த தவமே காரணம் என்று கச்சியப்பர் கூறுகிறார். சிங்கமுகாசுரனும் போர்க்களத்திலே தாமரைமலர் போன்ற முருகனுடைய திருமுகங்களையும், குண்டலங்களையும் கோலமார்பையும் கண்டு மனதைப் பறிகொடுத்தான்.

கோலமா மஞ்ஞையில் குலவிய குமரனை ஒரு சிறு குழந்தை என்று எண்ணிய சூரன், பின்னர் முருகனுடைய அழகையும், இளமையையும், தெய்வ நலத்தையும் கண்டு, உணர்ந்து மயங்கி நின்றான். ஆயிரகோடி மன்மதர் அழகெல்லாம் ஒன்று சேர்ந்தாலும், முருகனுடைய திருவடிகளின் அழகுக்கு இணையாகா என்றும் —

பல பல கோணங்களில் நின்று பல ஊழிக் காலம் பார்த்தாலும் அப்பேரழகு கண்களில் அடங்காது என்றும், முருகப்பெருமானுடைய அழகுக்கு உவமையாக எவரையும் கூறமுடியாது என்றும் கூறி முருகனுடைய தெவிட்டாத அழகில் ஈடுபட்டு அவனைத் துதித்து, பக்தனாகி வாழ விரும்பினான்.

தேர்த்திருவிழா மிகச் சிறப்பானது. தேரும், தேரோடும் வீதியும், தேரடியும் புனிதமானவை. நல்லூர்த் தேரடியில் தவம், செபம், தியானம் என்பவற்றில் ஈடுபட்டவர்கள் செல்லப்பா சுவாமிகளும், சிவயோகசுவாமிகளும் ஆவர்.

செல்லப்பா சுவாமிகளை நல்லூர்த் தேரடியில் யோகர் சுவாமிகள் கண்டு தரிசித்தார். "நல்லூர்த் தேரடியில் எங் குருவைக் கண்டேன்" என்றும் 'தேரடியிற் தேசிகனைக்கண்டுதெரிசித்தேன்" என்றும் சிவயோகசுவாமிகள் தனக்குக் கிடைத்த குருவருள் பற்றிக் கூறியுள்ளார்.

மகாவித்துவான் சி. கணேசையர் தேர்த்திருவிழாக் காட்சியை

(5ஆம் பக்கம் பார்க்க)

### மங்கையர்க்கரசி - திருச்சிற்றம்பலம்

சந்தனுக்கு அலங்காரம் செய்ய விரும்பிய அருணகிரிநாதர் பாமாலைகள் பாடி அலங்கரித்து மகிழ்ந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் நான்முகன் மீது ஒரு பெரிய குற்றத்தைச் சுமத்தினார்.

#### முருகனின் அழகு

திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக்கும் முருகனைக் கண்டு தொழுவதற்கு நான்முகன் நாலாயிரம் கண்களைப் படைக்கவில்லையே என அவர் கூறுவதிலிருந்து முருகனுடைய அழகின் மகிமை புலனாகின்றது. பக்தர்களுக்கும், அடியவர்களுக்கும் முருகப்பெருமான் அழகனாகக் காட்சியளிப்பதில் வியப்பில்லை. ஆனால் பகைவர்களாகிய சூரபன்மனும் அவனுடைய சகோதரர்களும் முருகனுடைய தெய்வீக அழகைக் கண்டு மகிழ்ந்தனர்.

கிரௌஞ்சகிரியில் வசித்து வந்த தாரகன், முருகப்பெருமானைப் பார்த்து, பூரண சந்தி...

#### கலியுகவரதன்

சரித்திரப் பிரசித்தியும், தொன்மையும் வாய்ந்த நல்லை நகரிலே கோயில் கொண்ட கலியுகவரதன் தமிழ் மக்களின் தனிப் பெருந் தெய்வம். அழகிய கலைக்கோயிலாகக் காட்சியளிக்கும் நல்லூர் ஆலயம் அமைந்த இடம் ஒரு புனிதமான பிரதேசமாகும். இங்கு ஞானிகள் பலர் நடமாடி இறையருள் பெற்றுள்ளனர். சித்தர்களும் பக்தர்களும் நல்லூரான் கருணையை நாடி அங்கு கூடுவார்கள். கடையிற்சுவாமிகள் அங்கு நடமாடி அருள் பெற்று மகிழ்ந்த நிலையில் ஒரு சித்தர் பரம்பரையை உருவாக்கியுள்ளார்.

ஓர் ஆலயத்தில் நடைபெறும் திருவிழாக்களில்...

# அலங்காரக் கந்தன்

## நல்லூர் ஞானபண்டிதன்

**வினை** தீர்க்கும் வேலவப் பெருமான் கலியுக வரதனாகக் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தலங்களில் ஒன்று யாழ்ப்பாணத்து நல்லூர்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இவ்வாலயம் ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகுவால் கட்டப் பெற்றது.

கரங்கூப்பிச் சிரந்தாழ்த்திக் கந்தனை வலம் வந்தால் பிறவிப்பிணி தீயிற்பட்ட பஞ்சுபோல் அற்றுப்போய் விடும் என்பது ஆன்றோர் கூற்று.

'எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே' என்பது யோகர் சுவாமிகள் கூறியது.

செல்வச் சந்நிதியை அன்னதானக் கந்தன் என்றும் கதிர்காமத்தை அருள் வழங்கும் கந்தன் என்றும் நல்லூரை அலங்காரக் கந்தன் என்றும் கூறுவர். ஆகவே நல்லைக் கந்தன் நல்விழாப் பொலிவு காண இரண்டு கண்கள் போதா. அவன் அலங்காரக் காட்சிகளை நாம் சொடுத்து வைத்திருக்க வேண்டும்.

'செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே' என அருணகிரியார் அங்கலாய்த்தார்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாய்க் காட்சி தரும் கந்தன் கருணை மழை பொழிந்து பக்தரைக் காக்கின்றான்.

தந்தைக்கு உபதேசித்து சுவாமிநாதனாக விளங்கும் ஞானபண்டிதனை மனதிலே வந்து சிந்தித்து நல்லூரில் நின்று சேவித்து வளமான பாக்களால் வந்தித்து வழிபாடியற்றிடும் மக்கள் கூட்டம் எண்ணிலடங்காது.

அருள் மணக்கும் ஆலயமாக விளங்கும் நல்லூர் இன்று மக்களின் துயர் துடைக்கும் திருத்தலமாகவும் மிளிர்கின்றது.

கஷ்டமுறும் வேளையில் கைதொழுது, 'கந்தா! என் செயலாவது யாதொன்றுமில்லை. யாவும் உன் செயலே' என்று தம்மை முற்றாக அவனிடம் ஒப்படைத்து அர்ப்பணித்து விடும் பக்தர் கூட்டத்தின் பக்தி தான் என்னே!

கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாக விளங்கும் கந்தனை, கடம்பனை, காங்கேயனை, கார்த்திகேயனை, கார்மயில்வாகனனை 'எந்தாயுமெனக்கருள் தந்தையும் நீ— சிந்தாகுலமானவை தீர்த்தெனையாள் கந்தா— கதிர்வேலவனே உமையாள் மைந்தா, குமரா, மறை நாயகனே' என துதிப்போம்.

—இ. ஸ்ரீதரன்

### தேரினில் வருவாய் கந்தா!

தேரினில் வந்தே நாட்டின்
தென்திசைப் பகைமை நீக்கி
ஊரினில் வாழும் மக்கள்
உறுதுயர் எல்லாம் தாங்கி
பாரினில் அமைதி காத்தே
பருவரல் யாவும் தீர்த்து
சீரினில் குறையா தெங்கும்
சிறப்புகள் தருவாய் சரணம்.

தெருவினில் நின்றே நாங்கள்
தேரினில் பவனி செல்லும்
உருவினில் பெரிய உன்றன்
உள்ளொளி காண்போம் ஐயா!
கருவினில் பிறவா வண்ணம்
காத்தருள் புரியும் ஸ்வாமி
அருவினில் உருவாய் நிற்கும்
அறுமுகப் பொருளே சரணம்.

— சிங்கையாழியான் —

### நல்லூரைக் கும்பிடு

இராகம்: ஜோகினி    தாளம்: ஆதி

**பல்லவி**

நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு — அதனாலே
நாடடி உள்ள பிணிகள் ஓடும்

**அனுபல்லவி**

செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்த நாடு
தேங்காயுடன் பழம் கொண்டு நீ செல்லு (நல்லூ)

**சரணம்**

வாடி உன்மனம் ஒடிந்தாலும் வருத்தங்கள்
கோடி கோடியாகக் கூடினாலும் — குறைகள் வந்து
தேடி உன்னை மூடினாலும் — செல்லப்பன் பாதம்
சிந்தித்தால் ஓடி ஓடிப்போமே
பெண்டு பிள்ளைகளென்று பேதைமை கொண்டுநீ
கண்ட கண்ட இடம் கலங்கி நீ திரியாதே! (நல்லூ)

—சிவயோக சுவாமிகள்

நல்லூர் கந்தனின்
திருவருளை இறைஞ்சுகின்றோம்
✷
பெஷன் ஹவுஸ்
65 கே. கே. எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23016

நல்லூர்த் தேர்த்திருவிழா




கோயில் தேவைகளுக்கும், நாளாந்த பாவனைக்குமான விபூதி தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.




உ

நல்லூரான் வீதி நடந்தார் வினை தீரும்!

நம்பித் தொழுவோர்
நலம் பெறுவர் எந்நாளும்!

தங்கொணு இடர்கள் மத்தியிலும், திருவருள் துணைநிற்க இரவு பகல் இருபத்திநான்கு மணி நேரமும் சேவையாற்றிக்கொண்டேயிருக்கும்

ரெலிகுளோப்

ரெலிபோன் சேவையாளர்கள்

ஆர். வி. கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்நகர். ரெலி: 25088 - பத்து தொடர்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் கந்தன் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்

## பார் மகிழப் படைகொண்ட வேலன்

# நல்லூரில் தேரூர்ந்து வருகின்றான் இன்று

எல்லாக் கண்டா மணிகளதும் நாவசை வால் எழுந்த ஒலி ஓங்கார நாதப்பிரவாகமாக, குளிர்ந்த காற்றேடு கூடி உதய சூரியனின் மென் கதிர்களில் திளைத்துக் கொண்டிருக்கும் ஊரில், கவிந்து பரந்து படர்கிறது.

திரளான மக்களது 'ஹரஹர'' ஓசை வசந்த மண்டபத்திலிருந்து பொங்கி எழுந்து உள் வீதி வெளி வீதிகளில் நெருங்கிய பக்தர்களின் உள்ளங்களிலும் உணர்வுகளிலும் உரைகளிலும் அலைமோதிச் செல்கிறது நல்லூர் ஆறுமுகப்பெருமானுக்கு அடுக்குத் தீபம் காட்டப்படுகிறது.

இன்று கந்தன் தேரேறும் நல்ல நாள்

'திருவடியும் தண்டையும் சிலம்பும் சிலம்பு ஊடுருவப் பொருவடி வேலும் கடம்பும் தடம்புயம் ஆறிரண்டும் மருவடிவான வதனங்கள் ஆறும் மலர்க்கண்களும்' கொண்டு கஜவல்லி மகா வல்லி சமேதரராய்ச் சிம்மாசனத்தில் வீற்றிருந்து அருள் மழைபொழியும் அந்த அற்புதக்காட்சியை கற்பூர ஹாராத்தியின் செவ்வொளியிற் காண்பதற்கு அடியவர்கள் நெருக்கத்திஞல் தங்க ளீத் தாங்களே பிழிந்து கொண்டு, மனமும் கண்களும் மலர மகிழும் நிலைவேறெங்கும் நிகழாதவொன்று.

### நல்லூர்க் கந்தனின் பெருமை

இன்று நேற்றல்ல சண்பகப் பெருமாள் என்று சொல்லப்பட்ட ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு பதினைந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே நல்லூர்க் கந்தசுவாமி கோவிலைக் கட்டுவித்தான் என்பது சரித்திர உண்மை. கடந்த ஐந்நூறு வருடங்களாகக் கோடானு கோடி மக்களிதயங்களிலே வற்றாத முதிரூத அணி நலங்கொண்டு திகழ்கின்றான் நல்லூர்ப் பெருமான்.

நீளமான காலத்தின் எல்லையுள் வாழ்ந்தவர்கள் எங்கள் கந்தன் எங்கள் முருகன் என்று தங்களில் ஒருவனுகவே கொள்ளுமளவுக்கு எல்லோர் வாழ்விலும் பின்னிப் பிணைந்தவன் நல்லூர்க் கந்தன்.

— மு. தியாகராஜா —
நல்லை ஆதீனம்

தேரேறுவதற்கு வசந்த மண்டபத்திலிருந்து பெருமான் புறப்படுகிருர். ஆர்ப்பரித்து எழுந்து திரைகள் மோதும் சமுத்திரத்திலே செல்லும் பாய்க்கப்பல்போல நல்லூர் ஆறுமுகன், பக்கங்களிலும் பின்னும் முன்னுமாக நிரம்பிய மனித சமுத்திரத்திலே நீந்தி வந்து தேரில் ஆரோகணித்துக்கொள்கிருர்.

### பக்தரின் ஆரவாரம்

பக்தர்களின் ஆரவாரம் பூரித்து எழுகிறது. முன்னுலே வைத்தகண் வாங்காது அவனை அள்ளிப்பருகும் பக்தர்கள். பின்னுல் அங்கப் பிரதட்சணமும், அடியழித்தலுஞ் செய்யும் அடியார்கள். ஆங்காங்கே முருகன் புகழ் பாடும் அன்பர்கள். சிந்தையிலே அவனைத் தவிர வேறு சிந்தனைகளேயில்லை.

அவனுந் தன் பன்னிரு

(5ஆம் பக்கம் பார்க்க)



### நல்லூர் முருகன்

இராகம்: தோடி தாளம்: ஆதி

பல்லவி

நல்லையில் வாசா ஞானப் பிரகாசா

அனுபல்லவி

நல்லதெய்வானை வள்ளியம்மை சமேதா
நரர்சுரர் பணி ஞானபண்டிதா பரா (நல்லை)

சரணம்

நான் உன்னை நம்பினேன் நல்குரவு பிணி
நலியாமல் மெலியாமல் அருள்தந்து ஆளுவாய்
தேனுந்து வேங்கையாய்த் தினைப்புனம் நின்றனை
ஸ்ரீராமன் மருகனே முருகனே கிருபாகரா (நல்லை)

—சிவயோக சுவாமிகள்

### திருநல்லைக் கந்தன் அந்தாதி வெண்பா

நாவலர்கள் போற்றுகின்ற நல்லூரில் நாயகனே
தேவரெல்லாம் போற்றும் சிகாமணியே — ஓவரிய
செம்மவினை தீர்ப்பவனே சித்திரவே லாயுதனே
என் மனத்தே என்றும் இரு.

இருமா தணைபன் னிருகையா என்றன்
இருமா வினைதீர்க்கும் எந்தாய் — திருவார்
பழனமிகு நல்லூர்ப் பரனே அருள்வாய்
கழலிணையாம் ஞானக் கரும்பு.

கரும்பே திருநல்லூர்க் கந்தக் கனியே
அரும்பே றளிக்கும் அரசே — இரும்புமனப்
பந்தமுடையேன் பணிந்துன் பதம்பாடச்
சந்ததமும் நின்னருளைத் தா.

தாமரையாள் நல்மருகா தங்கு நல்லூர் வேல்முருகா
காமருவு கந்தங் கனிந்த கதிர் — காமமதில்
வள்ளி தெய்வ யானையொடு வாழ்பவனே தந்தருள்வாய்
தெள்ளுதமிழ் ஞானச் செந்தேன்.

தேனூர் கடம்பா திருநல்லூர்ச் சண்முகவா
மானீன்ற வள்ளி மணவாளா — வானுடர்
மன்னுங் கதிர்காம மன்னு தருவாய் நின்
பொன்னின் திருவடியாம் பூ.

பூமகளும் பொன்னரம் போற்றுகலை முத்தாரம்
நாமகளும் சூடமகிழ் நல்லூரா — ஓமருவு
மூல மூரைத்த முருகா அருள்புரிவாய்
நீலமயில் மீதினிலே நின்று

அருளா ரமுதே அன்பின் சுவையே
இருளாசை போக்கும் இறைவா — பொருளறியேன்
புன் கவியும் ஏற்பவனே பொன்மதில்சூழ் நல்லூரா
என் கவலை தீர்த்தான் இனிது.

தீரா வினைதீர்க்கத் தேரேறி வீதிவரும்
பேரா யிரமுடைய பெம்மானே — கூரான
வேல் பிடித்த கையா மிகுந்தகலை நல்லூரா
கால் பிடித்தேன் நீயே கதி.

கதிபெறினும் ஜென்மம் கடையேன் பெறினும்
மதியழியும் நேரம் வரினும் — மதியிரவி
பொற்கவிகை ஏந்து நல்லூர்ப் பூரணனே தந்தருள் நின்
நற் கழலைப் பாடுகின்ற நா.

—அருட்கவி. சி. விநாசித்தம்பி


நல்லைப் பரம்பொருளே! வருக!!
எலக்ரோனிக், தன்னியக்க கைக்கடிகாரம்,
கடிகாரம், மேசை மணிக்கூடு
மற்றும்
எல்லாவிதமான கடிகாரங்களும்
திருப்திகரமாகவும், உத்தரவாதத்துடனும்
பழுதுபார்க்க
யாழ்நகரில் நாடவேண்டிய
ஒரே இடம்.
டயா வார்ச் வேக்ஸ்
இல: 6, யூபிலி பஜார், யாழ்ப்பாணம்.
(ராணி தியேட்டர் அருகாமை)



நல்லூர் மாமணியே! வருக! வருக!!
* நோய் காணும் மருந்தை தொடிப் பொழுதில் பெற்றிட
* டாக்டர்களின் ஆலோசனையின் பின் சகல ஆங்கில மருந்துகளை வாங்கிட
* பள்ளிச்சிறுர்களின் சகல உபகரணங்களையும் பெற்றிட
* குழந்தைச் செல்வங்களின் போஷாக்கு நிறை உணவுகளை வாங்கிட
உடன் நாடுங்கள்
துவாரகா பான்சி ஹவ்ஸ்
பார்மஸி குரோசறி
இல: 107, Y. M. C. A. Shoping Complex
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.



வெளிவந்துவிட்டது
புதிய சமூகக்கல்வி
8 ஆம் ஆண்டு
(இறுதி 6 மாதங்களுக்குரியது)
ஆலோசனை, சி. நடராஜா B A. Dip in Ed
(சமூகக்கல்வி வலய ஆலோசகர்)
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.



நல்லூர் கந்தன் தேரேறி வந்து
எம் இன்னல் போக்க வேண்டுகின்றோம்!
காலத்துக்கேற்ற நவீன டிசைன்களை
22 கரட்டில் தருவதில் முன்னணியில் நிற்பவர்கள்
★
யப்பான் ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்.



நல்லூர்க் கந்தனின்
தேர்த்திருவிழா
சிறப்பாக நடைபெறும் இவ்வேளையில்
J.C.C. நிறுவனம்
உங்களை அன்புடன்
அழைக்கிறது !
உரும்பராய், உரும்பராயை அண்மித்துள்ள
கிராமங்களில் வாழும் இனிய
தமிழ் மக்களே உங்களின் அத்தியாவசிய
தேவைகளைப் பூர்த்திசெய்ய
J C.C. உங்களை அன்புடன்
வரவேற்கிறது !
உரும்பராய் சந்தியில் பொன் சிவகுமாரன் சிலைக்கு முன்னுல் அமைந்துள்ள மாடிக் கட்டிடத்தில் பல சேவைகளை உங்களுக்கு வழங்குகின்றது
1] உங்கள் திருமணம், புதுமனைப் பிரவேசம், வீட்டு விசேட நிகழ்ச்சிகள், அப்ப நிகழ்ச்சிகளுக்குத் தேவையான தகரப் பந்தல்கள், இரும்புக் கதிரைகள் என்பவற்றை உங்கள் இல்லங்களுக்கே குறித்த நேரத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பித்து மீண்டும் கொண்டுசெல்கின்றனர்.
4. விற்பனைப் பொருட்கள்:
வீட்டுக் கட்டிட சம்பந்தமான பொருட்கள்
மின்சாரப் பொருட்கள்
குளியலறை உபகரணங்கள்
விவசாய உர வகைகள்
விவசாய உபகரணங்கள்
விவசாய மருந்து வகைகள்
புதிய சைக்கிள்கள்
சைக்கிள் உபகரணங்கள்
எவர் சில்வர் சாமான்கள்
பிளாஸ்ரிக் சாமான்கள்
அலுமினியப் பாத்திரங்கள்
தையலுக்குத் தேவையான சகலவிதமான நூல் வகைகள், சட்டைப் பொத்தான்கள் கதிரை, பைகள் பின்னும் வயர்கள் மக்கரம் பின்னும் நூல்கள், வளையல்கள், பீஸ் வகைகள்
சகல விதமான பொலித்தீன் வகைகள் குங்குமம், பவுடர், லிப்ஸ்ரிக் நெயில்பொலிஷ், கிளிப், றிபன்
சகலவித லேஸ்வகைகள், பலவித சென்ற் வகைகள், குளிர்பானம் தயாரிக்கும் எமல்சன், சிற்றிக் அசிட், பிளாஸ்க், சூட்கேஸ், பனைமிலான கூடைகள், சுவர்க்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், கல்குலேட்டர்கள் சகலவிதமான சிறுவர் விளையாட்டுப் பொருட்கள், குழந்தைகளுக்கான குளிக்கும் தொட்டிகள், சாமிப்படங்கள், முகம் பார்க்கும் கண்ணுடிகள் இன்னும் நானுவித பொருட்கள்.
J.C.C. நிறுவனம்
உரும்பராய் சந்தி, உரும்பராய்.



ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு
ஓர் இனிமையான செய்தி!
'மைக்ரோ கொம்யூனிககேசன்'
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.
ரெலிபோன் - ரெலக்ஸ்
சேவைகள்!
உள்நாட்டிலும்—வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அலைவரிசைகளில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்
MICRO
மைக்ரோ
கொம்யூனிக்கேசன்
ஸ்தாபனத்தார்.
ரெலிபோன் - ரெலக்ஸ் சேவையில்
பல வருடகால அனுபவம் பெற்றவர்களின் தொழில்நுட்ப கண்காணிப்பின்கீழ் தங்கள் உன்னத சேவையை வழங்குகின்றுர்கள்!
'மைக்ரோ கொம்யூனிக்கேசன்'
கே. கே. எஸ். வீதி, குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.
உங்கள் தேவையே எங்கள் சேவை!
உங்கள் தேவைகளை திறம்படச் செய்து தருவதற்கு எங்கள் ஸ்தாபனத்தின் இதயக் கதவுகள் இரவு — பகல் இடையுறுது திறந்திருக்கும்.
வருக! வருக!! வருக!!!



பனம் பொருள் உணவு
அறிமுக விழா
பனை அபிவிருத்திச் சபையின்
அனுசரணையுடன்
யாழ் பீச் இன்
ஆதரவில்
ஜோ. எகட்டன்
வழங்குகின்றுர்
முற்றிலும் புதிய பாணியில் பனம் பொருளினுல் உணவு வகைகள் உங்களுக்கு உங்கள் முன்னிலையில் தயாரித்து வழங்கப்படுகின்றது
ஆம்! 07-09-1986 அன்று
பிரதம அதிதி:
அதிவணக்கத்திற்குரிய
கலாநிதி வ. தியோகுப்பிள்ளை அவர்கள்
(யாழ். மாவட்ட ஆயர்)
காலை 10.30 மணி முதல்
இலக்கம் 139, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்
யாழ் பீச் இன்சில்
உங்கள் அனைவரையும் பங்குபற்ற
அழைக்கின்றோம்.
என்றும் புதுமையை வழங்கும் ஜோ. எகட்டன் ஜப்பான் சென்று திரும்பியதும் வழங்கும் யாழ்நகரில் முதல் பனம் பொருள் உணவு அறிமுக விழா!
இத்திகதியை நினைவில்
வைத்துக்கொள்ளுங்கள்!
செனித AD'S


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நல்லைக் கந்தன் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்

# அலங்காரத் தேரில் பவனி; அடியார்க்கு அற்புதக் காட்சி

அருள் சுரக்கும் ஆலயமாக விளங்கும் நல்லூர் ஆகம முறைப்படி அமைந்த திருத்தலமாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற அடியார் வினை தீர்க்கும் முருகவேள் கருணை பொழி முகங்களோடு வீற்றிருக்கின்றான்.

சங்கடம் போக்கும் சண்முகன் சரவணப் பொய்கையிலே உதித்து அன்னை பராசக்தியால் அணைக்கப் பெற்று கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டான்.

சங்கரத்தில் உதித்த சக்தி சிவன் பாகமமர்ந்து சிங்கார வேலவனுடன் சிருங்காரமாய் அமர்ந்து ஒய்யாரமாய் வீற்றிருக்கும் அழகே தனி.

## உற்சவம்

உற்சவம் என்பது மேலான செல்வம் எனவும் உத்தம யாகம் எனவும் பஞ்சகிருத்தியங்களைக் குறிப்பது எனவும் ஆகமவிதி கூறும். இவ்விழாவை நடத்துபவர்களும் பார்ப்பவர்களும் நடாத்துவிப்பவர்களும் புண்ணியவான்களே. ஆகவே நல்லூர் விழாக் காணும் அத்தனை பேரும் அரும் பெரும் புண்ணிய சீலர்களாவர்.

கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பெற்றுக் கார்த்திகேயன் என்ற பெயர் பெறும் கந்தன் தொல்லை வினை நீக்கும் நல்லையிலே இல்லையென்னாது அருளும் சின்னருட் தெய்வமாய் இலங்குகின்றான்.

கந்தக் கடவுளைக் கைதொழுதால் பந்த வினை அறும். பழவினை பறந்தோடும்; சந்ததமும் சண்முகனைத் தியானித்தால் சர்வரோகமும் நீங்கப்பெற்று சந்தோஷ வாழ்வு கிட்டும்.

அருட்சக்தி ஆறுமுகசாமி வள்ளி தெய்வயானையுடன் அலங்காரமாய் நேரில் பவனி வரும் அற்புதக் காட்சி உள்ளத்தைத் தொடும் காட்சி. ஆனந்தமயமான அந்த வேளையை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும் அதன் அருமை.

தொல்லை வினை போக்கும் நல்லைக் கந்தனைத் தொழுதால் வினையெல்லாம் தொலைந்து போமே. ✶

> **வரம் தா கந்தா!**
>
> -அமரர் வன்னியூர்க் கவிராயர்-
>
> 'என்கவிதை நீடூழிவாழவேண்டும்
> எனது புகழ் மலைவிளக்காய் இலங்கவேண்டும்
> பொன்வேண்டும் பொருள்வேண்டும் பூமிவேண்டும்
> பூவை தெய்வ யானை—வள்ளி சகிதம் நின்னைக்
> கண்கள் சிந்தை பூசிக்கக் காணவேண்டும்
> காயத்திற்பிணி, மூப்புச் சாக்காடற்ற
> குன்றாத எழிலிளமை வேண்டும்; இந்தக்
> குவலயத்திற் பிறப்புடனே முத்திவேண்டும்!'
>
> ✶ ✶ ✶
>
> 'இன்னவைகள் கேட்கிறேன்; சம்பிரதாயம்
> இவைகளை நீதந்தாலும் தராவிட்டாலும்
> உன்னிடத்தில் யான் கேட்ப தொன்றேயொன்று
> உடல்,ஆவி பொருள்,ஆத்மாவில் மேலாம் என்
> அன்னை மொழி இனிய மொழி தமிழ் மொழி
> அரியணையில் அனவரதம் வாழ வேண்டும்
> நன்னயமார் இவ்வரத்தைத் தரத்தான் வேண்டும்
> நானிலத்தோர் போற்றும் நல்லைக் கந்தா!'
>
> (நல்லைக்கந்தனிடம் ஒரேயொரு வரங் கேட்கும் கவிதை — அமரர் வன்னியூர்க் கவிராயரின் கையெழுத்துப் பிரதியிலிருந்து எடுக்கப்பட்டது அனுப்பியவர்:- எஸ். கே. சண்முகநாதன்) மல்வம், உடுவில்.

## பார் மகிழப் படைகொண்ட வேலன்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி) திருவிழிகளாலும் எல்லோருக்கும் அருள் பொழிகிறான்.

தேரோட்ட விழா சங்காரத் தொழிலைக் குறிப்பதாகக் கொள்ளப்படும். சிவபிரான் முன்னர் திரிபுரதகனத்திற்காகப் பூமியாகிய தேரிற் சென்றார் என்பது புராணம். ஆறுமுகப் பெருமானும் தமது மனோவேகப் பொற்றேரில் சென்று மாயை, கன்மம், ஆணவம் என்பவற்றின் உருவங்களாக விளங்கிய தாரகன், சிங்கன், சூரபத்மன் ஆகியோர்களைக் கிளைகளோடுஞ் சங்கரித்துத் தேவர்களைச் சிறைமீட்டார் என்பது கந்தபுராண நிகழ்வு.

> "வெற்றிவடிவேலன்-
> அவனுடை
> வீரத்தினைப் புகழ்வோம்
> சுற்றி நில்லாதேபோ-
> பகையே
> துள்ளி வருகுது வேல்'

இன்று நல்லூர்க் கந்தப் பெருமான் தேரேறி வருகிறான். எமது உள்ளப்பகைகளைக் களைவதற்காக ஞானவாளேந்தி நாதப்பறை முழக்கிய செல்லப்பாச் சுவாமியவர்களையும் யோகசுவாமிகள் அவர்களையும் தன் தேரடியிலே நிலவச் செய்தான் கந்தன்.

இன்றும் ஆயிரமாயிரம் இளஞ் செல்வங்களை நாலாபுறமுஞ் செலவிட்டு, தேரின் முன்னால் மலைபோல் விளங்கும் சிதர்த்தேங்காய்க் குவியல் போல் எம்புறப் பகைகளையெல்லாம் நொருக்கித் தள்ளுகிறான். நாமிருக்கப் பயமேன் என நாலாவீதியுந் தேரூரும் நல்லூர்க் கந்தனை நாம் வாழ்த்தி உய்தியடைவோமாக.

> 'ஆறிரு தடந்தோள்
> வாழ்க
> அறுமுகம் வாழ்க
> வெற்பைக்
> கூறுசெய் தனிவேல்
> வாழ்க
> குக்குடம் வாழ்க
> செவ்வேள்
> ஏறிய மஞ்ஞை வாழ்க
> யானைதன் அணங்கும்
> வாழ்க
> மாறிலா வள்ளி வாழ்க
> வாழ்கசீர் அடியா
> ரெல்லாம் ✶

## அருள்மலர்ப்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

> நல்லூரில் வீற்றிருக்கு
> நாடவொணு
> னறுமுகவன்
> பல்லோருங் கண்கண்டே
> பணிந்துமிக
> வின்பமுற
> எல்லாருந் தேர்மிசையே
> யேறிவருங் காட்சி
> சொல
> வல்லாரு மிங்கண்டோ
> வானோர்க்கு
> மரிதேயாம்.

என்று அழகு தமிழிலே பாடி தேர்த்திருவிழாவின் சிறப்பை நன்கு சித்திரித்துள்ளார்.

முருகன்என்ற நாமத்தில் எத்தனையோ சிறப்புகள் அடங்கியுள்ளன. பெரும் பெயர் முருகனுடைய நாமம் மிக மகிமையும், மந்திர சக்தியும் வாய்ந்தது. முருகா என்ற நாமம் எல்லா நாமங்களையும் தன்னுள்ளே கொண்டு விளங்குவதால் "முருகா எனும் நாமங்கள்" என்று கந்தரலங்காரத்தில் அருணகிரிநாதர் குறிப்பிட்டுள்ளார். மொழிக்குத் துணையாக விளங்கும் இந்த நாமத்தை இடையறாது நவின்று நல்லருள் பெறுவோமாக ✶


நல்லூர் வெற்றிவேலவன் தேர் பவனியில் வாழ்த்துக் கூறுகிறோம்

பாடசாலை புத்தகங்கள்
பாடசாலை உபகரணங்கள்
✶ பிறந்த தின ✶ தீபாவளி ✶ பொங்கல்
✶ புதுவருட வாழ்த்து மடல்கள்
ஆகியவற்றை மிகக் குறைந்த விலையில் பெற

சாரதா புத்தகசாலை
இல. 2, பஸ் நிலையம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

நல்லூரான் கருணை பெருக வாழ்த்துகின்றோம்



எம்.ரி. சோமசுந்தரம் அன் சன்ஸ்
199 மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23845 தந்தி: பாதுகாதேவி

நல்லூர்க் கந்தன் அடியார்களே!
மாபெரும்
புத்தகக் கண்காட்சி
(நல்லூர்க்கந்தன் உற்சவத்தை முன்னிட்டு 4-9-86 வரை)

உயர் வகுப்பு பாடநூல்களும், மற்றும் சமயம், சோதிடம், வைத்தியம், யோகாசனம், அரசியல், விஞ்ஞானம், தொழில் நுட்பம், சங்கீதம், கோலம் போடும் கலை, தமிழ் மூலம் ஆங்கிலம் கற்றல், அகராதிகள், குழந்தை இலக்கிய நூல்கள், சித்திரக் கதைகள், ஆங்கில தமிழ் கொமிக்ஸ், அரிச்சுவடிகள், முற்போக்கு இலக்கியங்கள், ஆராய்ச்சி நூல்கள், கதை கட்டுரை, நாவல்கள், துப்பறியும் கதைகள் நியூ செஞ்சுரி புக்கவுஸ் வெளியீடுகள் என்பவற்றைத் தெரிவுசெய்ய

நல்லூர் சிவன் கோயிலுக்கு அருகாமையிலுள்ள எமது கண்காட்சிச் சாலைக்கு குழந்தைகளுடன் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
Bargain sales of English Novels, Magazines and Periodicals

Something New in Jaffna
YOU ARE CORDIALLY INVITED TO VISIT:
Hotel Gnanam's
UNDER NEW MANAGEMENT
Relax at BEER GARDEN
BEER Rs. 30.00
A/C or NON A/C ROOMS
50/- to 200/-
ALSO
CHINESE MEALS
COOL DRINKS,
SHORTEATS, & LUNCH
ORDERS UNDERTAKEN FOR
✶ WEDDING RECEPTION
✶ BIRTHDAY PARTIES
✶ COCKTAIL PARTIES
✶ CONFERENCE
✶ SEMINAR
Etc. Etc. Etc. Etc, Etc.
உங்கள் உடலிற்கும் உள்ளத்திற்கும் புதிய தெம்பை அளிக்க
காலை 9.00 முதல் இரவு 11.00 மணி வரை
உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி வசதியுடன் சேவைசெய்யக் காத்திருக்கின்றது.
ஹோட்டல் ஞானம்ஸ்
299, மணிக்கூட்டு வீதி,
யாழ்நகர்
Safety Travels யாழ். - கொழும்பு
பஸ் சேவை ஆசனம் பதிவு செய்யலாம்
Telephone: 22082, 23067
Where Our Standards are High

நல்லூர் கந்தனின் திருவடிகளை இறைஞ்சுகிறோம்
யாழ்நகரில் உங்கள் அபிமான புடவை மாளிகை
சி. கே. பி.
ரெக்ஸ்ரைல்ஸ்
7, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
போன்: 23503

ஓம் முருகா
உருவா யருவா யுளதாயிலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.
— கந்தரநுபூதி.
10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார் சோப் மேலுறைகளைக் கொடுத்து ஓர் அழகிய முருகன் ஸ்ரிக்கரைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- மில்க்வைற் யாழ்ப்பாணம்.

எல்லாவகையான பிலிம்ரோல்களும் கழுவி பிறின்ட் செய்து ஏழு தினங்களில் கொடுக்கப்படும்.
பிலிம் ரோல்ஸ், பிறின்றிங், பேப்பர், கெமிக்கல்ஸ்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
✶
GNANAMS STUDIO
301, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

நல்லை முருகன் அனைவர்க்கும் நல் அருள் பாலிப்பாராக!
ஐடியல் ஏஜன்சி
ESSENCE CANAL
267B, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
அபிராமி எசன்ஸ் றேட்ஸ்
31, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

நல்லூர் திருவிழாவில் உங்கள் பிரிய 'அணில்' ஐஸ்கிறீம்
Free from Saccharin
Safe for Children
80 ml. PLASTIC CUPS Rs. 4/-
Also CONES & FAMILY BLOCKS
Jaffna Leos
Ice Cream Stall

நல்லைக் கந்தனின் அருளை இறைஞ்சுகின்றோம்.
சிறந்த விளையாட்டு நட்சத்திரமாகத் திகழ தரமான விளையாட்டு உபகரணங்களுக்கு மிகச் சிறந்த நம்பிக்கையான இடம்.
✶
யாழ் என்டர்பிரைஸஸ்
516 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நல்லூர் வேலா வருக!
உங்களுக்கு தேவையான சகலவிதமான சித்த, ஆயுள்வேத மருந்துகளும், எண்ணெய்வகைகளும், நம்பிக்கையாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
✶ ராதா மின்சார மருந்து
✶ ராதா குரு தைலம்
✶ ராதா மணிமார்க் சந்தநாதித்தைலம்
✶ ராதா மணிமார்க் கேசரோக நிவாரண தைலம்
✶ ராதா பிரமி கூந்தல் தைலம்
✶ ராதா ஓமவாட்டர்
✶ கோரோசனை மாத்திரை
✶ சஞ்சீவி மாத்திரை
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53(191)கே கே எஸ் வீதி, யாழ்ப்பாணம், 22541
160 செட்டியார் தெரு கொழும்பு, 35825

வாருங்கள்! பாருங்கள்!! பேசுங்கள்!!! மகிழுங்கள்!!!!
எங்கே எவ்விடத்தில் என்று நினைக்கின்றீர்கள்?
சுண்டிக்குளியில்
எபனி
ஸ்தாபனத்தினர்
உள்நாட்டு வெளிநாட்டு
ரெலிபோன் ரெலெக்ஸ்
சேவை செய்ய உங்களை அழைக்கிறார்கள்!
கேள்விப்பட்டோர் வரத் துடிப்பது
வந்தவர்கள் உடன் பேசத் துடிப்பது
பேசியவர்கள் திரும்பவும் வரத் துடிப்பது
EBANEE
(கச்சேரி பஸ் நிலையத்திற் முன்னால்)
A. R. கட்டிடம்,
10 கச்சேரி - நல்லூர் வீதி
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
ரெலிபோன்: 24344, 24845

ஆங்கிலம் படிக்கிறீர்களா?
உங்களுக்கு நல்ல உதவி செய்ய வெளிவந்திருக்கிறது,
LEARNER'S ENGLISH
(லேணர்ஸ் இங்கிலிஷ்)
ஆங்கில மொழியைப் பிழையின்றி எழுதவும் வாசிக்கவும், பேசவும் இந்நூல் உங்களுக்கு நல்ல உதவி செய்கிறது.
விளக்கக் குறிப்புகள் யாவும் தமிழிலேயே உள்ளது.
இதுபோன்ற நூல் இதுவரை வந்ததில்லை
✶ இது ஒரு வரதர் வெளியீடு'
விலை ரூபா 16.00
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
✶ நல்லூர்த் திருவிழா வைப்பிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின்
அனுசரணையுடன்
யாழ் பீச் இன்ஸ் ஆதரவுடன்
ஜோ. எகட்டன்
7-9-1986 அன்று
யாழ் பீச் இன்சில் வழங்குகின்றார்
மறந்து விடாதீர்கள் 7-9-1986
பனம் பொருள் உணவுக்
கண்காட்சி
ஜோ. எகட்டன் வழங்கும் நிகழ்ச்சி



# உதயன்

02 09 -1986 செவ்வாய்க்கிழமை



பனம் பொருள் அபிவிருத்திச் சபையின்
அனுசரணையுடன்
யாழ் பீச் இன்ஸ் ஆதரவுடன்
ஜோ. எகட்டன்
7-9-1986 அன்று
யாழ் பீச் இன்சில் வழங்குகின்றார்
மறந்து விடாதீர்கள் 7-9-1986
பனம் பொருள் உணவுக்
கண்காட்சி
ஜோ. எகட்டன் வழங்கும் நிகழ்ச்சி


## லலித் கூற்று

கொழும்பு, செப். 2
இனப்பிரச்சினையைத் தீர்க்க ஜனாதிபதி எடுத்து வரும் நடவடிக்கைகளின் முயற்சிகளில் நம்பிக்கை வைக்க மறுப்பது, இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய தவறாக இருக்கும்.

—இப்படி தேசியபாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி சொன்னார். (உ-ஈ)

## தொழிற் பயிற்சிகள்

விவசாயம், வெல்டிங் தொழிற் பயிற்சி. இடம் Y. T. C., மருதனார் மடம் விபரங்களுக்கு 'சஞ்சிகை' ஆகஸ்ட் 30 பார்க்கவும்

## காணவில்லை

நேற்று அச்சுவேலியிலிருந்து யாழ். வந்த தனியார் பஸ்ஸில் பேஸ் ஸாட்டின் தேசிய அடையாள அட்டையும் — தொலைத் தொடர்பு திணைக்கள அடையாள அட்டையும் மற்றும் சில முக்கிய தஸ்தாவேஜுகளும் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் தயவுசெய்து கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

பொ. ஆனந்தநாயகி
181, அரசடி ரோட்,
நல்லூர் - யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23654

கொள்ளைப் பொருள்களை திருப்பித் தராவிட்டால்

# வெள்ளிமுதல் கடையடைப்பு
# வெளியூர் லொறிசேவை நிறுத்தம்

## வர்த்தகர், போக்குவரத்து சங்கங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 1
கொள்ளை இடப்பட்ட பொருள்களைத் திருப்பி ஒப்படைக்காவிடில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் காலவரையறையின்றி பூரண கடையடைப்பு, தூர லொறிப் போக்குவரத்துச் சேவை நிறுத்தம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் முஸ்லிம் லொறி போக்குவரத்து ஒன்றியம், யாழ் லொறி போக்குவரத்துச் சங்கம், யாழ் வர்த்தகர் சங்கம் ஆகியவற்றின் கூட்டுக் குழு விடுத்த அறிக்கை ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை வருமாறு:

இதுவரை காலமும் பிற மாவட்டங்களில் இருந்து தருவிக்கப்படும் பொருள்கள் சூறையாடப்பட்டமை தொடர்பாக பல முறை விடுதலை அமைப்புகளிடம் முறையிட்டும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கடந்த ஆகஸ்ட் 27 ஆம் திகதியன்று கிளாஸ் ஹவுஸ்' நிறுவனத்துக்குச் சொந்தமான லொறியில் வந்த பொருள்கள் களவாடப்பட்டதோடு, அதன் சாரதியும் கிளீனரும் தாக்கப்பட்டு மானபங்கப்படுத்தப்பட்டனர்.

ஆகவே மேற் குறிப்பிட்ட சம்பவத்தில் கொள்ளை இடப்பட்ட சகல பொருள்களும் நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன் ஒப்படைக்கப்பட வேண்டும்.

இக்கோரிக்கை வெள்ளிக்கிழமை முதல் காலவரையறையின்றி பூரண கடையடைப்பு நடத்துவது என்றும் தூர இடத்திற்கான லொறிப் போக்குவரத்துச் சேவையை முற்று நிறுத்துவது என்றும் தீர்மானித்துள்ளோம்.

இதை விடுதலை அமைப்புக்களின் கவனத்திற்கும் தருகின்ற நடவடிக்கைக்கும் சமர்ப்பிக்கின்றோம்.

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ-ஈ)

## துப்பாக்கி முனையில் பணம், நகை கொள்ளை

மானிப்பாய், செப். 2
துப்பாக்கி முனையில் ஒரு இலட்சம் பெறுமதியான நகைகள், பணம் ஆகியன கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் உடுவில் கிழக்கில் ஒருவர் வீட்டில் நடைபெற்றது.

இச் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:

கடந்த சனிக்கிழமை இரவு 7 மணியளவில் வீடு சென்றுகொண்டிருந்த வரும் மனைவி பிள்ளைகளுமாக டி.வி நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்த வேளையில் இரண்டு இளைஞர்கள் வீட்டினுள் திடுமெனப் புகுந்து துப்பாக்கியை நீட்டினராம்.

தாம் ஒரு விடுதலை இயக்கத் தோழர்கள் என கூறி பணம் அல்லது நகை தருமாறு கேட்டனராம்.

வீட்டுக்காரரின் மனைவி கழுத்தில் இருந்த மூன்று பவுண் பெறுமதியான சங்கிலியைக் கழற்றிக் கொடுத்த சமயம் துப்பாக்கி, கத்தி ஆகியவற்றைக் காட்டி மிரட்டி விட்டு வீட்டில் இருந்த பெறுமதி மிக்க நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்ததுடன் வீட்டுக்காரர்களையும் தாக்கிவிட்டு தப்பியோடி விட்டனராம்.

சண்முகநாதன் என்பவரது வீட்டிலேயே இச் சம்பவம் நடந்தது. (உ-90)

## 2 பொலிஸார் மரணம்

யாழ்ப்பாணம், செப் 2
கடந்த சனிக்கிழமை புல்மோட்டை முகாமிலிருந்து சென்ற படையினர் குழு ஒன்றை விடுதலைப் புலிகள் தாக்கியதில் 2 பொலிஸார் கொல்லப்பட்டனர். நால்வர் படுகாயமடைந்தனர்.

— தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## புன்னாலை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கள் மத்தியில் ஓர் எதிர்பார்ப்பு இருந்தது.

தொடர்ந்த சில சம்பவங்களால் மீண்டும் பாடசாலை இயங்க முடியாதுள்ளது (உ-5)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலலும்



கமலவேணி கிருஷ்ணபிள்ளை
தோற்றம்- 3-1-1944
மறைவு- 4-8-1986
நீங்கள் எங்களை விட்டு மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலாது.

அன்னாரின் அந்தியேட்டியும் வீட்டுக் கிருத்தியங்களும் 3-9-1986 புதன்கிழமை காலை 6-30 மணி அளவில் பருத்தித்துறையில் நடைபெறும் அன்றைய தினம் நண்பர்களையும் உறவினர்களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

கணவன்:- சி கிருஷ்ணபிள்ளை (வெற்றிலைக்கேணி) தகப்பன்; க. வ. இராஜையா (பருத்தித்துறை)

பூவராயர் ஒழுங்கை
பருத்தித்துறை

## தர்மர் நினைவாஞ்சலி கூட்டம்

காங்கேசன்துறை, செப்.2
உடுவில் தொகுதியின் முன்னாள் உறுப்பினர் அமரர் வி. தர்மலிங்கத்தின் முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டம் இன்று சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

காலை 9 45க்கு தாவடியில் உள்ள அன்னாரின் நினைவு ஸ்தூபிக்கு மலர் அஞ்சலி செய்யப்படும்.

அதையடுத்து 10 மணிக்கு தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் விசேட பூசைகளும், அன்னதானமும் இடம்பெறும்.

மாலை உடுவில் உள்ளூராட்சி மன்றத்தில் நினைவுச் சின்னத்தை தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் திரு. சி. சிவமகாராசா திறந்து வைப்பார்.

பின்பு மருதனுமடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் திரு. ச. முத்துலிங்கம் தலைமையில் நடக்கும் கூட்டத்தில் யாழ் - அரசாங்க அதிபர் எம். பஞ்சலிங்கம் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார்.

இக்கூட்டத்தில் பேராசிரியர் ப. சந்திரசேகரம், உதவி அரசாங்க அதிபர் திரு. கோபாலரத்தினம், சிலம்புத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உட்பட பலர் உரையாற்றுவார்கள். (உ-68)

## சு. க. யோசனை மக்கள் பரிசிலனைக்கு

கொழும்பு, செப் 2
இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சுதந்திரக் கட்சியின் மாற்றுத் திட்டம் வெகுவிரைவில் பொது மக்களின் பரிசிலனைக்கு விடப்படும் என்று கட்சிப் பொதுச் செயலாளர் திரு சோமஸார நாயக்கா தெரிவித்திருக்கிறார். (அ-ஐ-ஈ)

## நல்லூர்க்கந்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பிரசங்க நிகழ்ச்சியில் திரு. ஐ வேலாயுதபிள்ளையின் இசைக்கச்சேரி இடம்பெறும்

மாலை 6 30 மணிக்கு ஆலய மேற்கு வீதியில் உள்ள பிள்ளையார் கோயில் மண்டபத்தில் திரு. வை நித்தியானந்த சர்மாவினால் "பானு கோபன் யுத்தம்" என்ற பொருளில் கந்த புராண தொடர் பிரசங்கம் நடைபெறும். (உ-10)

## கல்முனை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வரும், கூட்டணிப் பிரமுகருமான திரு ஆ. வேல்முருகு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்ததாவது:

சமாதானக் கூட்டம் என்று நாம் பேசுவோம் ஆனால் பிரச்சினைக்கு காரணமானவர்கள் தங்கள் பாட்டில் செயலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள் ஆகவே முஸ்லிம் இளைஞர்களும் தமிழ் இளைஞர்களும் சந்தித்துப் பேசும் நிலைமை ஒன்றை நாம் உருவாக்கா விட்டால் சமாதானம் என்பது வெறும் பேச்சளவில்தான் இருக்கும் என்றார்.

அ-எ-84

## வயாவிளான்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கூரை ஓடுகள் அகற்றப்பட்டதுடன் அவையும் உடைப்பதற்குத் தயாரான நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை உடைக்கப்பட்ட கட்டடங்களுடன் நேற்றும் மாடிக்கட்டடம் உடைக்கப்பட்டதாம் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் முற்று முழுதாகத் தகர்க்கப்பட்ட நிலையை அடைந்துள்ளது

பலாலி விமான நிலையத்துக்குப் பாதுகாப்பளிக்கும் நோக்கத்துடன் விமான நிலையத்தின் தென் மேற்குப் பக்கமாகவுள்ள சுடலைக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் மண் மூடைகள் அடுக்கப்பட்டு இராணுவத்தின் சென்றி ஸ்தானிக்கப்பட்டுள்ளது. (உ-119)

## கடத்தப்பட்ட சடலம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 2
கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்-ஆஸ்பத்திரியில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட சடலம் நேற்று மீண்டும் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டது

சடலம் கடத்தப்பட்டதையும் ஊழியர் தாக்கப்பட்டதையும் ஆட்சேபித்து நேற்று ஆஸ்பத்திரி ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

கடத்தப்பட்ட சடலம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்படவேண்டும், ஊழியரைத் தாக்கியோர் ஊழியர்கள் மத்தியில் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் ஆகிய இரு கோரிக்கைகள் ஊழியர்களால் முன்வைக்கப்பட்டன.

இதனையடுத்து யாழ்-ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரிச் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டதின் பேரில் சடலம் மீண்டும் நேற்று மாலை மூன்று மணியளவில் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டது.

சடலத்தைக் கடத்தியவர்கள் குற்றப்பணமாக ஐநூறு ரூபாவை நோயாளர் நலன்புரிச் சங்கத்திற்கு செலுத்தினர்.

ஊழியர்கள் மத்தியில் பகிரங்க மன்னிப்பும் கோரினர். (உ-10)

# தமிழ்நாடு இடைத்தேர்தல்களில் அ. தி. மு. க. வெற்றி

சென்னை, செப் 1
தமிழ் நாட்டில் அருப்புக் கோட்டைத் தொகுதியில் அண்ணா தி. மு. க வேட்பாளர் பஞ்சவர்ணம் வெற்றி அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது அ. தி. மு. க வேட்பாளருக்கு 55,245 வாக்குகளும் தி. மு. க. வேட்பாளருக்கு 34,353 வாக்குகளும் கிடைத்தன.

திருநெல்வேலித் தொகுதியில் அ. தி. மு. க. வேட்பாளரான அமைச்சர் இரா. வீரப்பன் தி. மு. க வேட்பாளரிலும் பார்க்க ஒன்பதினாயிரம் வாக்குகளால் முன்னணியில் நிற்பதாக அறிவிக்கப்பட்டது. (உ-ஈ)

## 'இந்து' வுக்குத் தடை

கொழும்பு, செப் 2
'இந்து' ஆங்கில நாளிதழின் வெள்ளிக்கிழமை இதழ் சுங்கப்பகுதியினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

காரணம் என்ன என்று அறிவிக்கப்படவில்லை. (அ-ஐ-எ)

## பெண் பத்திரிகையாளர் குத்தப்பட்டார்

கொழும்பு, செப் 2
நேற்றுக் காலை கொழும்பு ஆங்கில தினசரி ஒன்றில் பணி புரியும் பெண் பத்திரிகையாளர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார்.

அவரின் பெண் குழந்தைக்கும் காயம் ஏற்பட்டது.

பத்திரிகையாளர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

கொள்ளை முயற்சியின் போதே இனந்தெரியாத நபரால் அவர் குத்தப்பட்டார் என்று தெரிய வருகின்றது. (உ-எ)

## கண்ணிவெடியில் சிப்பாய்கள் காயம்

திருகோணமலை செப் 2
மூதூர் நகரில் ஞாயிறு காலை நடந்த நிலக் கண்ணி வெடித்தாக்குதலில் 4 சிப்பாய்கள் காயம் அடைந்தனர்.

கட்டைப் பறிச்சானில் இருந்து மூதூருக்கு இச் சிப்பாய்கள் ஜீப் ஒன்றில் வந்து கொண்டு இருந்தனர்.

மூதூரின் பெற்றோல் நிலையத்துக்கு அருகில் வைத்துக் நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் வாகனம் சிக்கியது. (இ-ஈ-150)

## நீத்தார் பட்டியல்

### மூத்ததம்பி - செல்வம்

ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகக் கொண்டவருமான மூத்ததம்பி — செல்வம் இளைப்பாறிய P. H I காலமாகிவிட்டார். அன்னார் திருமதி இரத்தினபூபதியின் அன்புக் கணவரும், இரத்தின செல்வம் (U K) கிருஷ்ணசெல்வம் ஜேர்மனி, ஆனந்தசெல்வம் ஜேர்மனி, இராசசெல்வம் அமெரிக்கா, வசந்தகுமாரி, பானுமதி, இந்துமதி ஜேர்மனி, சாவித்திரி ஜேர்மனி ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜி U K கமலவேணி (ராணி) ஜேர்மனி ஸ்ரீபாலன் இ. போ. ச. கொண்டாவில் ஆகியோரின் அன்பு மாமனாரும், றோன் ஜேர்மனி, சோபி, தனுஷ் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 2—9—86 செவ்வாய்க்கிழமை பி. ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்

தகவல்
ஸ்ரீ பாலன்


எமது பிரதேச பொருளாதார அபிவிருத்தியை முதற்பணியாகக் கொண்டு செயற்படுவது

## அபிவிருத்தி நிதியம்

337, கஸ்தூரியார் வீதி. கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

* சேமிப்புத் திட்டம்
  - O கன்னத வட்டி
  - O உயர்ந்த பாதுகாப்பு
  - O தேவையானபோது திரும்பப் பெறும் வசதி
* காசோலைகளைப் பணமாக மாற்றல்
  - O தொழிற்பாடுகளிலுள்ள சிரமங்களை நீக்கும் செயற் திட்டங்கள்
* அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு
  - O குறைந்த வட்டியில்
  - O இலகு தவணையில் கடன் வசதிகள்
* எமது பாரம்பரியமான நடைமுறையிலுள்ள தொழிற்பாட்டை நிறுவன ஒழுங்கமைப்பு - ல் மேற்கொண்டு நாளாந்தம் வாராந்தம் மாதாந்தம் என்ற பல்வேறு தவணைகளில் சீட்டுகள் நடத்தப்படவுள்ளன.

உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளது மாதாந்தச் சீட்டுக்கள்

உறுப்பினர் மாதங்கள் 10

ஆரம்பம்: 1986.09.10

| தொகுதி | சீட்டுத் தொகை | பெறுமதி |
|---|---|---|
| A | 100-00 | 1,000-00 |
| B | 250-00 | 2,500-00 |
| C | 500-00 | 5,000-00 |
| D | 1,000-00 | 10,000-00 |
| E | 5,000-00 | 50,000-00 |

வாடிக்கையாளர் கருத்துகளுக்கேற்ப புது வடிவங்களும் அறிமுகப்படுத்தப்படும்.

விபரங்களுக்கு தொடர்புகொள்ளுங்கள்:

அபிவிருத்தி நிதியம்
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



தொல்லைகள் ஒழிந்து
நல்லவை ஓங்க
நல்லைக் கந்தனை இறைஞ்சுகின்றோம்



உலகின் எந்தப் பாகத்துடனும்
நொடிப் பொழுதில்
தொடர்பு கொள்வதற்கு
INTERNATIONAL
COMMUNICATION COMPLEX
MANIPAY
சர்வதேச தொலைத் தொடர்பு நிலையம்
* உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்பு
* ரெலக்ஸ் வசதி
குளிரூட்டப்பட்ட அறையில் இதமானசேவை
இன்ரநாஷனல்
கொம்யூனிகேஷன்
கொம்பிளெக்ஸ்
282 ஆ, யாழ்ப்பாணம் வீதி
மானிப்பாய்



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி 02 - 09 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Numder QJ 60 N86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org